# GOLDEN PEACOCK AWARD FOR SUSTAINABILITY 2024

Tamil Nadu Newsprint and Papers Limited (TNPL) has been honored with the prestigious **Golden Peacock Award for Sustainability (GPAS)** for the year 2024. This renowned award, named after India's national bird, is conferred annually and includes a distinguished trophy and certificate. Winners are entitled to display the Golden Peacock Award logo, along with the award year, on their promotional materials, reinforcing their brand as sustainability leaders.

**The award aims to:**

- Encourage rapid improvement in stakeholder-oriented processes.
- Build brand equity in sustainability.
- Align workforce efforts towards sustainability goals.
- Enhance organizational performance in sustainability practices.

**TNPL's Exemplary Journey**

This achievement is a testament to TNPL's dedication to sustainable development, led by an exceptional team under the leadership of **Mr.S.Nagarajan**, Chief General Manager - Operations. Following a meticulous evaluation process by the esteemed Jury Members of the **Institute of Directors (IOD)**, TNPL emerged as the unanimous choice for the award.

TNPL's sustainability initiatives demonstrate that robust operational performance can align harmoniously with ecological preservation. These initiatives set a benchmark for the industry, showcasing how responsible business practices can contribute to a greener planet.

**Award Presentation**

The award was presented during the **IOD India's 2024 Annual London Global Convention on Corporate Governance & Sustainability**, held at the Hotel The Montcalm, Marble Arch, London, UK, on **Wednesday, November 13, 2024**, at 7:00 PM.

Representing TNPL, **Mr.S.Nagarajan**, Chief General Manager (Operations), and **Mr.K. Kalai Selvan**, General Manager (HR), accepted the award, symbolizing the collective efforts of the organization.



The award was jointly presented by:

- **Mr. M. Nagaraju, IAS**, Secretary, Department of Financial Services, Ministry of Finance, Govt. of India.
- **The Baroness Verma**, Global Chair, Advisory Council, Institute of Directors, India; Member of the House of Lords; and Former Minister for International Development, Energy & Climate Change, Govt. of UK.

Other dignitaries on the dais included:

- **Dr. Tayeb Kamali**, UAE Chairman, Institute of Directors, India; Chairman, Board of Trustees, Abu Dhabi School of Management, UAE.
- **Mr. Eugene Mayne**, Founder and Group CEO, Tristar Group, UAE.
- **Dr. Vivek Lall**, Chief Executive, General Atomics Global Corporation, USA.

**Recognition and Legacy**

This recognition highlights TNPL's leadership in sustainability, reflecting its unwavering commitment to responsible business practices and environmental stewardship. The award not only acknowledges TNPL's past achievements but also inspires the organization to continue as a sustainability leader, paving the way for others to follow.

The **Golden Peacock Sustainability Award 2024** is a resounding validation of TNPL's efforts in fostering sustainable excellence. It reinforces the company's role as a beacon of hope in creating a healthier, greener planet for generations to come.

# நிலைத்தன்மைக்கான தங்க மயில் விருது 2024

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (டி.என்.பி.எல்) 2024 ஆம் ஆண்டிற்கான மாபெரும் தங்க மயில் நிலைத்தன்மைக்கான விருதினை வென்று பெருமையடைந்துள்ளது. இந்தியாவின் தேசிய பறவையை குறிப்பிட்டு வழங்கப்படும் இந்த சிறப்புமிக்க விருது, ஒவ்வொரு ஆண்டும் மிகவும் மதிப்புமிக்க கேடயம் மற்றும் சான்றிதழுடன் வழங்கப்படுகிறது. வெற்றி பெற்ற நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களில், விருது வழங்கிய வருடத்தைச் சேர்த்து தங்க மயில் விருதின் சின்னத்தை பயன்படுத்துவதற்கான அனுமதியை கொண்டிருக்கும்.

**விருதின் நோக்கங்கள்:**

- பங்குதாரர் சார்ந்த செயல்முறைகளில் விரைவான முன்னேற்றங்களை ஊக்குவித்தல்.
- நிலைத்தன்மையின் தரத்தின் மதிப்பைக் கூட்டுதல்.
- தொழிலாளர்கள் நிலைத்தன்மை நோக்கங்களை நோக்கி பணியாற்ற ஊக்குவித்தல்.
- நிலைத்தன்மை நடைமுறைகளில் நிறுவனத்தின் செயல்தினை மேம்படுத்துதல்.

நமது நிறுவனத்தின் முன்னுதாரண பயணம்:

இந்த வெற்றி நிலைத்தன்மைக்கான நமது நிறுவனத்தின் அர்ப்பணிப்பு மற்றும் உயர் தரமான அணுகுமுறைகளின் சான்றாகும். திரு. எஸ். நாகராஜன் (முதன்மை பொதுமேலாளர் - செயல்பாடுகள்) தலைமையில் நமது நிறுவனத்தின் சிறந்த குழு உறுப்பினர்கள் இந்த சாதனைக்கு அடித்தளமாக அமைந்தனர். இந்திய இயக்குனர்களின் நிறுவனம் (IOD) ஜீரி உறுப்பினர்களின் கணிசமான மதிப்பீட்டு செயல்முறையின் பின்னர் நமது நிறுவனம் ஒருமனதாக இந்த விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.

நமது நிறுவனத்தின் நிலைத்தன்மை முயற்சிகள், செயல்பாட்டு திறமையை பராமரிக்க இயற்கை பாதுகாப்புடன் இணைந்து செயல்பட முடியும் என்பதை இந்த விருதானது நிரூபிக்கின்றது. ஒரு பசுமையான பூமிக்காக பொறுப்பான வணிக நடைமுறைகளை முன்னிலைப்படுத்தி தொழில்துறைக்கு ஒரு குறிப்பிட்ட அளவீடாக நமது நிறுவனம் திகழ்கின்றது.

**விருது வழங்கும் நிகழ்வு:**

இந்த விருது இந்திய இயக்குனர்களின் நிறுவனம் (IOD) நவம்பர் 13, 2024, புதன்கிழமை மாலை 7:00 மணிக்கு இங்கிலாந்தின் லண்டனில் உள்ள மார்பிள் ஆர்ச் தி மான்காலம் ஹோட்டலில் நடத்திய 2024 ஆம் ஆண்டிற்கான உலக மாநாட்டின்போது வழங்கப்பட்டது. இந்த மாநாட்டில் நமது நிறுவனத்தின் பிரதிநிதியாக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்களின் சார்பாக திரு. எஸ். நாகராஜன் (முதன்மை பொதுமேலாளர் - செயல்பாடுகள்) மற்றும் திரு. கே. கலைச்செல்வன் (பொதுமேலாளர் - மனித வளம்) கலந்துகொண்டு விருதினை பெற்றுக்கொண்டனர்.



**விருது வழங்கிய முக்கிய ஆளுமைகள்:**

- திரு. எம். நாகராஜு இ.ஆ.ப, செயலாளர், நிதி சேவைகள் துறை, நிதி அமைச்சகம், இந்திய அரசு.
- பேரோனஸ் வெர்மா, உலகத் தலைவர், ஆலோசனை குழு, இந்திய இயக்குநர்கள் நிறுவனம், இங்கிலாந்தின் பாராளுமன்ற லார்ட்ஸ் அவையின் உறுப்பினர், இங்கிலாந்தின் முன்னாள் ஆற்றல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர்.

**மேலும் பங்கேற்ற ஆளுமைகள்:**

- முனைவர் தயிப் காமாலி ஐக்கிய அரபு அமீரகம் தலைவர், இந்திய இயக்குநர்கள் நிறுவனம், தலைவர், அறங்காவலர் குழு அபுதாபி பள்ளி மேலாண்மை ஐக்கிய அரபு அமீரகம்.
- திரு. யூஜின் மேய்ன், நிறுவனர் மற்றும் குழும முதன்மை செயல் அதிகாரி ட்ரிஸ்டார் குழுமம் ஐக்கிய அரபு அமீரகம்.
- முனைவர் விவேக் லால், தலைமைச் செயலாளர், பொது அணு உலகளாவிய நிறுவனம் அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

**அங்கீகாரம் மற்றும் பாரம்பரியம்:**

விருதின் அங்கீகாரம் நமது நிறுவனம் நிலைத்தன்மை வழிநடத்தலில் முன்னணியாக இருப்பதைக் காட்டுகிறது. இது நிறுவனத்தின் பொறுப்பான வணிக நடைமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளை பிரதிபலிக்கிறது.

தங்க மயில் நிலைத்தன்மைக்கான விருது 2024 தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் நிலைத்தன்மை மேம்பாட்டிற்கான முயற்சிகளை உறுதிப்படுத்தும் ஓர் அடையாளமாக திகழ்கிறது. இது அடுத்த தலைமுறைகளுக்கு வழிகாட்டியாக பசுமையான மற்றும் ஆரோக்கியமான பூமியை உருவாக்கும் முயற்சிகளில் ஒரு ஒளிமிகு சுடராக செயல்பட நமது நிறுவனம் நிலைத்தன்மையின் செயல்பாடுகளை ஊக்குவிக்கிறது.